**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 - 2021**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) நீடிப்பதனூடாக வர்த்தக நகர் (கொழும்பு) மற்றும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கடற்துறைமுகம் (அம்பாந்தோட்டை) மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) என்பனவற்றிற்கிடையே தொடர்பினை பேனுதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் பகுதி 4 இன் கீழான அந்தரவேவ ஊடான மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 25 கி.மீ இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 55,965 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 55,615 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 435 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 350 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்மான வேலைகள் 2016 சனவரி 19 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 19 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2019 ஜுலை 09 வரை பின்னர் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலின நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2021 சனவரி 01 தொடக்கம் 2021 ஏப்ரல் 30 வரையான காலப்பகுதிக்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் உத்தியோகத்தர்களிற்கான சம்பள கொடுப்பனவுகளிற்காக ஏற்பட்ட செலவினம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 1.1 | 2020-12-31 அளவில் பீஎம்யூ வினை மூட தீர்மானித்திருந்ததுடன் அதன் படி அத்தியவசிய செயற்திட்ட உத்தியோகத்தரிற்கு சம்பளங்களை செலுத்த பணிப்பாளர் நாயகம் - ஆர்டிஏ விற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. | அதிவேகப்பாதையின் மொத்த கிரயம் செயற்திட்ட கிரயத்தின் கீழ் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல 08 இற்கு முரனாக காணி சுவீகரிப்பின் இழப்பீடு மீது செலுத்த வேண்டிய தாமத வட்டி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 5.26 | செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு கொடுப்பனவுகள் எஸ்பிடீ அலுவலகத்தினால் கையாளப்படுவதுடன் எஸ்பிடீ பிரிவு மூடப்பட்டதன் பின்னர்: காணி சுவீகரிப்புக்கள் ஆர்டிஏவின் காணிப்பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே இப்பந்தியில் கூறப்பட்ட பொறுப்பு செயற்திட்டத்தினுடைய இறுதி கணக்குகள் பதியப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டமானது நேரில் முறையின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரித்திருந்தும் அட்டுறு செலவினங்களில் அதிகரிப்பு மற்றும் நடைமுறை வேலை முறையே ரூபா 36.56 மில்லியன் மற்றும் 41.72 மில்லியன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 78.28 | உடன்பட்டனர். | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 72.82 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு (ஆர்டிஏ) மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும் ஆர்டிஏ விற்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் | 72.82 | அச்சொத்துக்கள் ஏற்கனவே ஆர்டிஏ விற்கு மாற்றப்பட்டுள்ளது. | சொத்துக்களின் மாற்றல் பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 72.82 மில்லியன் தொகையான ஆர்டிஏ விற்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் உறுதிப்படுத்த முடியாமல் போகக்கூடும். | | | |
| (உ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் தளபாடம் மற்றும் கணணி உபகரணம் போன்ற சில சொத்துக்கள் மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பிரிவு III மற்றும் றுவன்புர அதிவேகப்பாதை செயற்திட்டம் போன்றனவற்றிற்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும் அச்சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | - | உடன்பட்டனர். | மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மிகுதிகளை உறுதிப்படுத்த பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 காணி சவீகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| காணி சுவீகரிப்பு செயன்முறை 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயன்முறையை துரிதப்படுத்த உத்தியோகத்தர்களிற்கு கூட்டுமொத்தம் ரூபா 4.61 மில்லியன் ஊக்குவிப்புக்கள் செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் படி தாமத வட்டி 174 காணித்துண்டுகளிற்காக இன்னும் செலுத்த வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும் 12,894 காணித்துண்டுகளில் 1,010 காணித்துண்டுகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு இல 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு வேலைகள் தற்போது ஆர்டிஏ – காணி பிரிவினால் கையாளப்படுவதுடன் காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு இல 44 உடன் இணங்க படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளப்பெறப்படாத தொகைள் மீது பொதுத்திறைசேரியினால் 2016 மார்ச் தொடக்கம் 2021 மார்ச் வரையான காலப்பகுதிக்காக கடன் உடன்படிக்கையின் நிபந்தனை இல 2.3 மற்றும் 2.8 இன் கூறப்பட்ட பிரகாரம் ஒப்படைப்பு கட்டணமாக கூட்டுமொத்தம் ரூபா 430.96 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் பதியப்படவேண்டியதுடன் எதிர்கால ஒப்பந்தங்களின் ஒப்படைப்பு கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெறுவதற்கான ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 201.27 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்புபத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெறுவதற்கு ஒப்பந்ததாரரிற்கு பீஓகியுவ் பெறுமதி 12.6 மில்லியன் அதிகரிப்புடன் வரைபு இறுதி அறிக்கையின் பிரகாரம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். எதிர்கால ஒப்பந்தங்களிற்கான செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களிற்கான மீளப்பெறல்கள் அல்லது கொடுப்பனவுகளிற்காக ஓர் தனியான பீஓகியுவ் உருப்படியை உள்ளடக்காது இருக்க அது சீர் செய்யப்படும். | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைக்கான விசேட ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 1.10 இன் பிரகாரம் கம்பனி வரியின் போது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கான கொடுப்பனவின் அத்தாட்சி சமர்ப்பிக்கப்பட்டால் ஓர் ஏற்பாட்டு கூட்டுமொத்த உருப்படி ஊடாக மீளப்பெறல் செய்யப்படும். ஒப்பந்த உடன்படிக்கையில் சில தேவையற்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஆலோசகரினால் பெறப்பட்ட ரூபா 36.56 மில்லியன் தொகையான கம்பனி வரி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ஓர் பொறுப்பாக காட்டப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அது அரசாங்கத்தினால் தாங்கிக்கொள்ளப்பட வேண்டியிருக்கலாம். | உடன்பட்டனர். | ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகளை குறைக்க அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |